**கவனிக்க** .- *04.04.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* III , *பகுதி* II *மற்றும் பகுதி* IV *(அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1858 - 2014 අප්‍රේල් මස 11 වැනි සිකුරාදා - 2014.04.11

*1858 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | 598 | | |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2014, மே மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் - வெற்றிடம்

**வடமேல் மாகாண மாகாண சபை - குருநாகல்**

வடமேல் மாகாண ஜனகலா மன்றம்

**முகாமைத்துவ சேவையின் உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவி II ஆம் தரத்திற்காக ஆட்சேர்ப்பு - 2014**

வடமேல் மாகாண மாகாண சபையினால் வடமேல் மாகாண முதலமைச்சின் கீழ் கொண்டு நடாத்தப்படுகின்ற வடமேல் மாகாண ஜனகலா மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவி II ஆம் தரத்திற்கு ஆட்சேர்ப்பிற்காக தகைமையுடைய வடமேல் மாகாண ஜனகலா மன்றத்திற்கு நிரந்தர பதவியில் உள்ளவர்களிடமிருந்தும் வடமேல் மாகாணத்தில் நிரந்தரமாக வசிக்கின்ற இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன.

02. நியமிக்கப்படுகின்ற பதவிகளின் எண்ணிக்கை 01 ஆகும். வெற்றிடத்தினை பூர்த்தி செய்தல் அல்லது செய்யாதுவிடல் பற்றிய இறுதித் தீர்மானம் நியமன அதிகாரிக்கே உண்டு.

03. **ஆட்சேர்ப்பு முறை**.- ஆட்சேர்ப்பு செய்யப்படுவது மேற்கூறப்பட்ட சேவை வகுப்பீடு II ஆம் தரத்திற்கு மாத்திரமே.

3.1 வெளிவாரி விண்ணப்பதாரிகள்.- நியமன அதிகாரியினால் நியமிக்கப்படுகின்றவர்கள் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் பரவலான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின்படி அதிகூடிய தகைமையுடையதும் அதிக புள்ளிகளைப் பெற்றவர்களை ஆட்சேர்ப்பிற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

3.2 உள்வாரி விண்ணப்பதாரிகள்.- போட்டிப் பரீட்சை மூலமும் நேர்முகப் பரீட்சைக் குழுவினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை மூலமும் தேர்ந்தெடுக்கப்படுவர்.

3.3 நிரந்தரமாக்கல்.- உரிய பதவியில் II ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுகின்ற உத்தியோகத்தர் ஒருவர் 03 வருட காலம் (மூன்று வருட) நன்னடத்தை காலத்திற்கு உட்பட்டு நியமிக்கப்படுவதுடன், அவர் நன்னடத்தை காலத்தினுள் தமது உரிய கடமை மற்றும் ஒழுக்கம் என்பன மகிழ்ச்சிக்குரிய வகையில் கொண்டு நடாத்தப்பட்டிருப்பின் மற்றும் முதலாவது தடைகாண் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் நன்னடத்தை கால இறுதியில் சேவை/பதவி நிரந்தர மாக்கப்படும்.

3.4 ஆட்சேர்ப்பிற்கான சம்பளம்.- வெளிவாரி விண்ணப்பதாரி களிடத்தில் இருந்து ஆட்சேர்ப்பு செய்யும் போது உரியவரை சம்பளத் திட்டத்தில் ஆரம்ப படிநிலையில் வைக்கப்படும். உள்வாரி விண்ணப்பதாரி ஒருவரை ஆட்சேர்ப்பு செய்யும் போது வைக்கப்பட வேண்டிய சம்பள படிநிலை தாபனக் கோவையில் VII அத்தியாயத்தில் 04 ஆம் பிரிவின் சட்டத் திட்டங்களுக்கமைவாகும்.

4. **சம்பளம்**.- முகாமைத்துவ சேவை சுற்று நிரூப இலக்கம் 30 இல் குறிப்பிடப்பட்டுள்ள II மற்றும் I வகுப்புகளுக்கு உரிய சம்பள குறியீடு MM 1-1 2006 ஆவதுடன் மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 25,640-3×665 - 7 ×735 - 15 ×925 - ரூபா 46,655 ஆகும். ரூபா 33,705 மேற்படுவதற்காக I ஆம் வகுப்பை பெற்றுக் கொள்ள வேண்டும்.

5. இந்த பதவி நிரந்தரமானது, தொழில் ஊக்குவிப்பு நிதியம் மற்றும் தொழில் நம்பிக்கை நிதியத்திற்கு உரித்துடையதாகும்.

6. தகைமை.- வடமேல் மாகாண ஜனகலா மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவி II ஆம் தரத்திற்காக ஆட்சேர்ப்பதற்காக கீழ் காணப்படும் தகைமைகள் உரியதாகும்.

(அ) **எல்லா விண்ணப்பதாரிகளும்** :

(i) இலங்கை பிரசையாக இருத்தல் ;
(ii) பதவிக்கு அளிக்கப்படும் அலுவல்களை உரிய முறையில் செய்வதற்காக தேவைப்படுகின்ற உடல் உள ஆரோக்கியமாக இருத்தல் ;
(iii) நல்லொழுக்கமுள்ளவராக இருத்தல்;
(iv) தொடர்ந்து 03 வருட காலம் வடமேல் மாகாணத்தினுள் நிரந்தர குடியிருப்பாளராக இருத்தல்;
(v) ஆட்சேர்ப்பிற்காக தேவையான தகைமைகளை பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் பற்றி விண்ணப்பம் கோரும் அறிவித்தலில்/ வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதிக்கு எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பப் படிவம் பொறுப்பேற்கும் திகதிக்கு 22 வயதிற்கும் குறையாததும் 45 வயதிற்கு மேற்படாதிருத்தலும் வேண்டும்;

(இ) கீழக் காணப்படும் தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(i) பல்கலைக்கழக ஒதுக்கீட்டு ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் வர்த்தக பிரிவில் பட்டம் பெற்றிருத்தல்;

(ii) பட்டம்பெற்ற பின் இதற்கு சமமான பதவியில் 3 வருட காலம் மகிழ்ச்சிகரமான சேவைக் காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

எல்லா விண்ணப்பதாரிகளும் பதவிக்கு உரிய தகைமை 2014.04.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

7. தரம் உயர்வு.- செயலாற்றுகையினை மையமாக கொண்டு தரம் உயர்வு செய்யப்படும்.

7.1 சேவை வகுப்பீடு II ஆம் தரத்தில் இருந்து I ஆம் தரத்திற்கு தரம் உயர்த்தல்.

(அ) ஆரம்ப தேவை :

(i) நியமனம் நிரந்தரம் செய்யப்பட்டிருத்தல்.
(ii) சேவை வகுப்பீடு II ஆம் தரத்தில் குறைந்தபட்சம் 6 வருட சேவைக்காலத்தினை பூர்த்தி செய்தலுடன் உரிய காலத்திற்கு உரிய சம்பள ஏற்றம் எல்லாவற்றையும் பெற்றிருத்தல் வேண்டும்.
(iii) அனுமதிக்கப்பட்ட கணிப்பீட்டு செயலாற்றுகை நடவடிக்கை முறைப்படி 6 வருட காலத்தினுள் தரம் உயர்விற்கு விஷேட செயலாற்றுகையினை காட்டப்பட்டிருத்தலும் சிங்களம், தமிழ் மொழிகளில் தேர்ச்சியும் பெற்றிருத்தல்.

(iv) தரம் உயர்விற்கு 5 வருட காலத்திற்குள் மகிழ்ச்சிகரமான சேவை காலத்தினை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(v) இரண்டாம் மொழி பற்றிய திறமை பெற்றிருத்தல்.

8. விண்ணப்பப்படிவம்: இந்த அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி ஏ4 (21×29செ. மீ. ) (சாதாரண ஹாப்சீட்) அளவிலான கடதாசியில் இரு பக்கத்தையும் உபயோகித்து,

(அ) இலக்கம் 01 தொடக்கம் 06 வரை முதலாம் பக்கத்திலும்.

(ஆ) இலக்கம் 07 தொடக்கம் மற்றைய பந்திகளை இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறு முறைப்படுத்தி, அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினாலே தெளிவான எழுத்தில் எழுதப்படல் வேண்டும்.

(இ) விண்ணப்பப் படிவம் முறைப்படுத்தும் போது அங்கு தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியின் பெயரை சிங்கள விண்ணப்பப் படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப் படிவங்களில் தமிழிற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் வேண்டும்.

8.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை உடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் என்ற முடிவின்படி விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து வர்த்தமானி அறிவித்தலின் படி தகைமை உள்ளதா என்பது பற்றி பரிசீலிக்கும் சந்தர்ப்பத்தில் தேவையான தகைமை இல்லாது இருந்தால் அவர்களை சேர்த்துக்கொள்வதை இரத்துச் செய்யலாம்.

8.2 விண்ணப்பப் படிவம் இடப்பட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் “உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவி II ஆம் தரத்திற்கான ஆட்சேர்ப்பு - 2014, வடமேல் மாகாண ஜனகலா மன்றம்” என்று குறிப்பிடப்படல் வேண்டும்.

8.3 சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் 2014.04.25ஆந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வண்ணம் “முகாமைத்துவ பணிப்பாளர், வடமேல் ஜனகலா மன்றம், கண்டி வீதி, குருநாகல்” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

9. பிழையான தகவல்களும் தண்டணையும் : பூர்த்தி செய்யும் போது மிகவும் கவனமாக சரியான தகவல்களை வழங்க வேண்டும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் எந்த சந்தர்ப்பத்திலாவது பிழையானது என்று தெரியவரும் போது அவர் அரச சேவையில் இருந்து விலக்கப்பட முடியும்.

10. இந்த நியமனம் பெற்றுக்கொடுத்தலும் மற்றைய எல்லா தகவல்களும் இந்த அறிவித்தலின் சட்டதிட்டங்களை வழங்கப்படாத எந்தவொரு காரணம் பற்றிய கடைசி தீர்மானம் வடமேல் மாகாண ஜனகலா அமைப்பிற்குரியதாகும்.

சந்தன கருசிங்ஹ,
முகாமைத்துவ பணிப்பாளர்,
வடமேல் மாகாண ஜனகலா மன்றம்.

வடமேல் மாகாண ஜனகலா அமைப்பு அலுவலகம்,
கண்டி வீதி,
குருநாகல்,
2014, பெப்புருவரி 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**வடமேல் மாகாண ஜனகலா மன்றம்**

**முகாமைத்துவ சேவையின் உதவி பணிப்பாளர் (நிதி) பதவி II ஆம் தரத்திற்காக ஆட்சேர்ப்பு - 2014**

Recruitment For the Post of “Assistant Director(Finance) Grade II” 2014, Management Service Category- Wayamba Janakala Foundation

அலுவலக உபயோகத்திற்காக

01. முதலெழுத்துக்களுடன் பெயர் :-----.
(i) சிங்களத்தில் /தமிழில்:-----.
(ii) ஆங்கிலத்தில் :-----.
1.1 முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள் (தெளிவான எழுத்தில்) :-----.
(i) சிங்களத்தில்/தமிழில் :-----.
(ii) ஆங்கிலத்தில் :-----.
02. முகவரியும் தொலைபேசி இலக்கமும் :----.
(i) அலுவலக முகவரி :-----.
தொலைபேசி இலக்கம் :-----.
(ii) நிரந்தர முகவரி :-----.
தொலைபேசி இலக்கம் :-----.
03. பிறந்த திகதி :----.
ஆண்டு :----, மாதம் :----, திகதி :----.
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.
5. ஆண்/பெண் :----.
6. திருமணமானவர்/திருமணமாகாதவர் என்பது பற்றி :----.
7. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
8. மாவட்டம் :----.
9. இனம் :----.
10. கல்வித் தகைமை :-
(i) க. பொ. த. (சா. த.) பரீட்சை :-
பரீட்சை சுட்டெண்:----. வருடம்:----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை :-
பரீட்சை சுட்டெண்:----. வருடம்:----.

| பாடம் | சித்தி | பாடம் | சித்தி |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(iii) பட்டம் :-
பல்கலைக்கழகம் :-----.
பட்டம் :-----.
பரீட்சை வருடம் :-----.
சித்தி :-----.
11. தொழிற் தகைமை :----.
12. வேறு கல்வித் தகைமை :----.
13. நீங்கள் எந்த சந்தர்ப்பத்திலாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? உரிய கூட்டில் புள்ளடி ( X ) இடவும் .
ஆம் ☐ இல்லை ☐

ஆம் எனின் விபரம் தரவும் :-----.

*14. **விண்ணப்பதாரியின் உறுதியுரை.-***

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல் உண்மையானதும், பிழையற்றதும் என்றும் நான் உறுதிமொழிகின்றேன். இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையற்றவையும், பிழையானவையும் என பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவரின் நான் தகுதியற்றவன் ஆவேன் என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின் தெரியவரின் எவ்வித நட்டஈடும் இன்றி சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் .

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

***திணைக்களத் தலைவரின் சிபாரிசு***

வடமேல் மாகாண ஜனகலா அமைப்பின் முகாமைத்துவ சேவையின் ''உதவிப் பணிப்பாளர் (நிதி) பதவி II ஆம் தரத்திற்காக'' விண்ணப்பித்துள்ள ............அமைச்சில் /திணைக்களத்தில் / நிறுவனத்தில் சேவை செய்கின்ற ..................... திரு./திருமதி/செல்வி தற்போது ...................... ஆக சேவையில் உள்ளார் என்றும் அவரின் சேவை மற்றும் ஒழுக்கம் நன்று என்றும் சான்று பகர்கின்றேன். அவர் இந்த பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படின் தற்போதைய சேவையில் இருந்து விடுவிக்கப்பட முடியும்/முடியாது.

-----,
திணைக்களத்/ நிறுவனத்
தலைவரின் கையொப்பம்.

திகதி :-----.

*4-246*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.